## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : CC.No.285/2018
## வழக்கு சாட்சி PW–3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபால் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராம்தாஸ் | தொழில் | : | உதவி ஆய்வாளர் (பணிநிறைவு) |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 63 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது தென்காசியில் குடியிருந்து வருகிறேன். நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 13.09.2017ம் தேதி, 17.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சண்முகசுந்தரம் என்பவர் மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனை சென்று விபரம் தெரிந்து, அங்கு சென்று அவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.342/2017, சட்டப்பிரிவுகள் 294(பி), 324 இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை உதவி ஆய்வாளர்

பார்வைக்கும் வைத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

நான் சொன்ன நாளில், நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:26:16 +0530